ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1834/27 - 2013 ඔක්තෝබර් මස 30 වැනි බදාදා - 2013.10.30

*1834/27 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*1992 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மேல் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் சட்டவாக்கத்தின் 7 (1), (2) மற்றும் 30 (1), (2), 1993 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மேல் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் (திருத்தப்பட்ட) சட்டவாக்கத்தின் 5- 6 ஆம் பிரிவின் கீழ் உள்ள விதிகள்*

மேல் மாகாண சபையின் 2002 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பயணிகள் போக்குவரத்து முச்சக்கரவண்டிச் சேவை சட்டவாக்கம் மற்றும் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மேல் மாகாண சபையின் வழிப்பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைகள் (திருத்தப்பட்ட) சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவின் கீழுள்ள விதிகள் இத்தால் இரத்துச் செய்யப்படும்.

1992 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மேல் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் சட்டவாக்கத்தின் 7 (1), (2) மற்றும் 30 (1), (2), 1993 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மேல் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் (திருத்தப்பட்ட) சட்டவாக்கத்தின் 5- 6 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மேல் மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முச்சக்கரவண்டிகள் மற்றும் வாடகை வண்டிகள் தொடர்பாகத் தொகுக்கப்பட்டுள்ள விதிகள் கீழ்வருமாறு என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

எச். எம். உபாலி கொடிகார,<br>
போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாச்சார அலுவல்கள், கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கலும் விநியோகமும் கிராம அபிவிருத்தி அலுவல்களுக்குமான அமைச்சர்.

2013, ஒற்றோபர் 10.

1. இவ்விதிகள் "முச்சக்கரவண்டிகள் மற்றும் வாடகை வண்டிகள் மூலம் பயணிகள் ஏற்றிச் செல்லுதல் தொடர்பான விதிகள்" என அறிமுகப்படுத்துவதுடன், குறிப்பிட்ட விதிகள் 2013, ஒற்றோபர் 10 ஆந் திகதி முதல் மேல் மாகாணத்தின் உள்ளே அமுல் செய்யப்படுகின்றன.

2. முச்சக்கரவண்டிகள் மற்றும் வாடகை வண்டிகள் மேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவைகள் சட்டவாக்கத்தின் நியதிகளின் பிரகாரம் அதிகாரபூர்வமான வாகனங்கள் என்பதுடன், பின்வரும் விதிகளுக்கு மேலதிகமாக முச்சக்கரவண்டிகள் மற்றும் வாடகை வண்டிகள் தொடர்பாக மேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் சட்டவாக்கத்தின் மற்றும் குறிப்பிட்ட சட்டவாக்கத்தில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களும் அதன் கீழ் அமைக்கப்பட்டுள்ள பிரமாணங்கள் மற்றும் கட்டளைகளும் முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளுக்கு பொருந்தும் வகையில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களின்படி முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகள் தொடர்பாகவும் பொருந்தும்.

3. மேல் மாகாணத்தின் உள்ளே தினமும் பயணிகள் சேவையில் ஈடுபடும் அனைத்து முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளும் இதன் பிற்பாடு அதிகார சபை என அழைக்கப்படும் மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4. அதிகார சபையினால் வழங்கப்பட்டதும், குறிப்பிட்ட காலத்தில் செல்லுபடியானதுமான நிரந்தர பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தின் அல்லது பயணிகள் போக்குவரத்துக்காக வேறொரு அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரம் தவிர்ந்து எந்நபரும் கட்டண அல்லது இலாப அடிப்படையில் தினமும் பயணிகள் போக்குவரத்துக்காக எவ்வித முச்சக்கர வண்டியையோ மற்றும் வாடகை வண்டியையோ மேல் மாகாணத்தின் உள்ளே பயன்படுத்துதல் கூடாது.

5. கட்டணம் அல்லது இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு பயணிகள் போக்குவரத்து மேற்கொள்வதற்கான அனுமதிப்பத்திரம் அல்லது அவ்வாறான வேறு அதிகாரம் பெற்ற அனைத்து முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளும் குறிப்பிட்ட பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தின் அல்லது அவ்வாறான வேறு அதிகாரத்தின் பிரதியொன்றை முச்சக்கர வண்டி மற்றும் வாடகை வண்டியின் முகப்புக் கண்ணாடியில் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

6. அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் ஓடும் அனைத்து முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளினதும் முற்புற வலது உடல்பகுதியில் அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திர விவரச் சீட்டைக் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

7. முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகள் பதிவிற்கு அதிகார சபைக்கு விண்ணப்பப்பத்திரத்தை முன்வைக்கையில் அதிகார சபை வாகனத்தின் தரக்கட்டுப்பாட்டு அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். வாகனத்தின் ஓட்ட நிலைமை திருப்திகரமாக இருந்தால் மாத்திரமே தரக் கட்டுப்பாட்டு அறிக்கை வழங்கப்படும்.

8. முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகள் சேவையை மேற்கொள்ளும் நிறுவனங்கள் பயணிகள் போக்குவரத்திற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு விண்ணப்பப்பத்திரத்தை முன்வைக்கும் போது தமது நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழை முன்வைத்தல் வேண்டும்.

9. நிறுவனத்தினால் பயணிகள் போக்குவரத்திற்கு பயன்படுத்தும் வாகனங்கள் அந்நிறுவனத்திற்கு சொந்தமானவையாக இல்லாவிடின் அவ்வாகன உரிமையாளரிடமிருந்து பயணிகள் போக்குவரத்துக்காக நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருப்பதற்கான சட்டரீதியான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

10. மேல் மாகாணத்தின் உள்ளே நிரந்தர பயணிகள் போக்குவரத்துச் சேவையை மேற்கொள்வதற்காக பயணிகள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளின் உரிமையாளர்கள் அதிகாரசபையினால் அறிவுறுத்தப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்தின்படி தயாரித்த விண்ணப்பப்பத்திரம் ஒன்றை அதிகாரசபைக்கு முன்வைத்தல் வேண்டும்.

11. முச்சக்கர வண்டி மற்றும் வாடகை வண்டி மூலம் பயணிகள் போக்குவரத்து மேற்கொள்ளல் தொடர்பாக அதிகாரசபைக்கு முன்வைக்கும் அனைத்து விண்ணப்பப்பத்திரங்களுடனும் குறிப்பிட்ட விண்ணப்பப்பத்திரத்தில் கேட்கப்பட்டுள்ள விவரங்களுக்கு மேலதிகமாக பயணிகள் பாதுகாப்பு மற்றும் சௌகரியம் சம்பந்தமாக அதிகாரசபையால் முன்வைக்கக் கோரும் விபரங்களையும் ஆவணங்களையும் விண்ணப்பதாரி முன்வைத்தல் வேண்டும்.

12. முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளைப் பதிவு செய்த உரிமையாளர்கள் அல்லது (8) ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் சாரா ஒருவர் தவிர்ந்த எவருக்கும் நிரந்தர பயணிகள் போக்குவரத்து சேவையொன்றை மேற்கொள்வதற்கான பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தை வழங்கக்கூடாது.

13. ஒரு முச்சக்கரவண்டி மற்றும் ஒரு வாடகை வண்டிக்கு பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் ஒன்றை விடக் கூடுதலாக வழங்கக் கூடாது.

14. அனுமதிப்பத்திரம் தொடர்பாக விண்ணப்பிக்கும் போது முன்வைக்கப்பட்ட விவரங்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படின், குறிப்பிட்ட மாற்றங்கள் ஏற்பட்டு 14 நாட்களுக்குள் அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும்.

15. பயணிகள் போக்குவரத்து சேவையொன்றை மேற்கொள்வதற்காக ஏதேனும் முச்சகரவண்டிகள் மற்றும் வாடகை வண்டிக்கு பெற்றுக்கொடுத்துள்ள நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை அதிகாரசபையின் எழுத்துமூல முன் அனுமதியின்றி பராதீனப்படுத்துவதோ அல்லது வேறு ஏதேனும் முறையில் மாற்றுவதோ கூடாது. அவ்வகைப் பராதீனப்படுத்துகை வெற்றும் சட்டப்படி செல்லுபடியாகாததும் ஆகும்.

16. முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிரந்தரபயணிகள் போக்குவரத்து சேவைகள் அனுமதிப்பத்திரம், முற்கூட்டியே இரத்துச் செய்யப்படாது இருந்தாலேயொழிய, வழங்கப்பட்ட திகதியிலிருந்து 12 மாத காலப்பகுதிக்குச் செல்லுபடியாகும்.

*17. பயணிகள் போக்குவரத்துக்காக முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிக்கு வேறு அதிகாரசபை ஒன்றினால் வழங்கப்பட்டுள்ள பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலப்பிரிவு குறிப்பிட்ட அதிகார சபையினால் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பிரிவிற்கு மாத்திரம் செல்லுபடியாகும்.*

*18. பயணிகள் போக்குவரத்து மேற்கொள்ளும் முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகள் தொடர்பான கட்டணங்கள் கீழ்வரும் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட கட்டணங்களை அனுமதிப்பத்திர விண்ணப்பதாரியோ அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரோ செலுத்துதல் வேண்டும்.*

*19. நிரந்தர பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர் மற்றும் முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகள் மூலம் பயணிகள் போக்குவரத்து மேற்கொள்வதற்கான வேறு அதிகாரத்தைப் பெற்றுள்ள அனைவரும் குறிப்பிட்ட நிரந்தர பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தின் அல்லது வேறு அதிகாரசபையால் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.*

*20. அதிகாரசபையால் வழங்கப்படும் நிரந்தர பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தைக் கொண்ட அல்லது வேறு அதிகாரசபையின் கீழ் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும் அனைத்து முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளின் சாரதி அதிகார சபையில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.*

*21. பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எவரும் அதிகாரசபையில் பதிவு செய்து கொள்ளாத ஒரு சாரதியை அனுமதிப்பத்திரத்தைக் கொண்ட முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகள் மூலம் பயணிகள் போக்குவரத்தை மேற்கொள்வதற்கு ஈடுபடுத்துதல் கூடாது.*

*22. அதிகாரசபையால் வழங்கப்பட்டுள்ள நிரந்தர பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தைக் கொண்ட அல்லது வேறு அதிகாரத்தின் கீழ் பயணிகள் போக்குவத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டியின் சாரதி ஒருவர் அதிகாரசபையால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை முச்சக்கர வண்டி மற்றும் வாடகை வண்டியை ஓட்டும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தம்மிடம் வைத்துக்கொள்ள வேண்டியதுள்ளதுடன் அவ்வடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் முச்சக்கர வண்டி மற்றும் வாடகை வண்டியில் காணக்கூடியவாறு தெளிவாகக் காட்சிப்படுத்துதல் வேண்டும்.*

*23. அதிகாரசபையால் வழங்கப்பட்டுள்ள நிரந்தர பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தின் கீழ் பயணிகள் போக்குவரத்து மேற்கொள்ளும் முச்சக்கர வண்டி மற்றும் வாடகை வண்டியில் கட்டண மீற்றர் ஒன்றைப் பொருத்திக் கொள்ள வேண்டியுள்ளதுடன் குறிப்பிட்ட கட்டண மீற்றர் தொடர்பாக அதிகாரசபையால் காலத்துக்கு காலம் விடுவிக்கப்படும் கட்டளைகளை அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்போர் பின்பற்றுதல் வேண்டும்.*

*24. முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளில் பொருத்தப்பட்டுள்ள ஒலிபெருக்கிகளினால் வெளியிடப்படும் ஒலி மட்டம் அதிகாரசபையினால் அறிவுறுத்தப்பட்டுள்ள ஒலிமட்டத்தை விட அதிகரிக்கக் கூடாது.*

*25. அனுமதிப்பத்திரத்தைக் கொண்ட அனைத்து முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளின் சாரதிகளும் ஓட்டுகையில் அதிகாரசபையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களினால் வழங்கும் சமிக்ஞைகள் மற்றும் அறிவுறுத்தல்களின்படி இணங்கி நடத்தல் வேண்டும்.*

*26. அதிகாரசபையால் வழங்கப்பட்டுள்ள நிரந்தர பயணிகள் போக்குவத்து சேவை அனுமதிப்பத்திரத்தின் கீழ் பயணிகள் ஏற்றிச் செல்லும் அனைத்து முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளிலும் குறிப்பிட்ட முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகள் மூலம் ஏற்றிச் செல்கையில் அறவிடப்படும் கட்டணம் குறித்து கட்டண அட்டவணையொன்று பயணிகள் காணும் வித்தில் முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளில் தெளிவாகக் காட்சிப்படுத்தல் வேண்டும்.*

*27. முச்சக்கர வண்டி மற்றும் வாடகை வண்டி ஒன்றின் மூலம் கொண்டு செல்லக்கூடிய பயணிகள் எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகரிக்கக்கூடாது.*

*28. முச்சக்கர வண்டி மற்றும் வாடகை வண்டி ஒன்றின் மூலம் பயணிகள் போக்குவரத்தை மேற்கொள்வதற்கு அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள நிரந்தர பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் அல்லது வேறு அதிகாரம் பெற்ற ஒன்றினால் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றவர் மேல் மாகாண வழிப் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைகள் நியதிச் சட்டத்தின் சட்டதிட்டங்கள் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் விதி, கட்டளைகள் ஆகியவற்றின்படி ஒழுகி நடப்பதற்கு அவசியம் என மாகாண சபை கருதும் கட்டளைகளை குறிப்பிட்ட நபருக்கு வழங்கலாம் என்பதுடன் அக்கட்டளைகள் வழங்கப்பட்டது எவரேனும் குறிப்பிட்ட நபருக்கெனின் அந்நபர் அக்கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பிரிவிற்குள் அக்கட்டளைகளிப்படி செயற்படுத்தல் வேண்டும்.*

*29. முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகள் மூலம் பயணிகள் ஏற்றிச் செல்கையில் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களை மீறுவது குற்றமாகுவதுடன், குறிப்பிட்ட குற்றம் மற்றும் குற்றங்களுக்கு அறவிடப்படும் தண்டப்பணம் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

30. முச்சக்கர வண்டி மற்றும் வாடகை வண்டி உரிமையாளர்கள் மேல் மாகாண போக்குவரத்து அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் ஒன்றிற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

## முதலாவது அட்டவணை

| | | ரூபா சதம் |
|---|---|---|
| 1. | பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 100.00 |
| 2. | நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திர கட்டணம் | 250.00 |
| 3. | பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றை மாற்றுவதற்கான கட்டணம் | 500.00 |
| 4. | விபரச்சீட்டுக்கு (லேபல்) | 30.00 |

## முச்சக்கர வண்டி மற்றும் வாடகை வண்டியில் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள்

1. வருமானவரிச் சான்றிதழ்
2. காப்புறுதி
3. அதிகாரசபையின் பதிவுச் சான்றிதழ்
4. சாரதி அனுமதிப்பத்திரம்

## இரண்டாவது அட்டவணை

| | | ரூபா சதம் |
|---|---|---|
| 1. | செல்லுபடியாகும் பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை தம் வசம் வைத்திராமை | 100.00 |
| 2. | அனுமதிப்பத்திர விவரச்சீட்டு குறிப்பிட்டபடி காட்சிப்படுத்தப்படாமை | 100.00 |
| 3. | அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் வழங்கப்படும் அறிவுறுத்தல் மற்றும் சமிக்ஞைகளைப் பின்பற்றாமை | 100.00 |
| 4. | அனுமதிக்கப்பட்ட கட்டண மீற்றரைப் பொறுத்தாது ஓட்டுதல் | 100.00 |
| 5. | அனுமதிப்பத்திர விபரச்சீட்டை முகப்புக் கண்ணாடியில் காட்சிப்படுத்தாமை | 100.00 |
| 6. | அதிகாரசபையால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை சாரதி தம் வசம் வைத்திராமை | 100.00 |
| 7. | ஒலிபெருக்கி மூலம் வெளியிடும் சத்தம் அனுமதிக்கப்பட்ட ஒலி மட்டத்தை விட அதிகரித்தல் | 100.00 |
| 8. | அதிகாரசபையால் பயணிகள் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் வாகனம் தொடர்பாகக் கோரப்படும் ஆவண விபர அறிக்கைகளை முன்வைக்காதிருத்தல் | 250.00 |
| 9. | அதிகாரசபையில் பதிவு செய்யப்படாத சாரதி ஒருவரால் மேற்கொள்ளப்படும் பயணிகள் போக்குவரத்து | 2,000.00 |

11- 474

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.